பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 05 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுகாதாரம், விவசாயம், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் மத்திய-மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளில் 12 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்ற மாநாடு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

தூய்மை, சுகாதாரம், இளையோருக்கு அதிகாரமளித்தல், விவசாயம், தொழில்நுட்பம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நீர்ப் பாதுகாப்பு, மக்கள் குறைகளுக்கு தீர்வு காணும் நடைமுறைகள், வலுவான நிர்வாகக் கட்டமைப்பு, கல்வி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு மாநிலங்கள் மேற்கொண்டு வரும் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் உறுதியான சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக இந்தியா, உலகின் 4வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் ஆற்றிய பங்களிப்புக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டமைப்பதில் தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக திரு. சர்பானந்த சோனோவால் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுடன் அனைத்து துறைகளின் வளர்ச்சியும் அவசியம் என்று மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் காணொலி மூலம் கலந்துகொண்டு பேசிய அமைச்சர், நாட்டின் பாரம்பரிய நடைமுறைகள் இந்தியா மீதான நன்மதிப்பை உயர்த்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வறுமை, வேலைவாய்ப்பின்மை, ஊட்டச்சத்து குறைபாடு போன்றவற்றுக்கு தீர்வு காண்பது சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

உயிரி தொழில்நுட்பம், தகவல் தொடர்பு போன்ற துறைகளில் இந்தியா முன்னெப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சி கண்டு வருவதாக திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளில் 12 லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

நேற்று கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் - 42 செகண்ட்ஸ்)

<<<<>>>>

உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வை இளைஞர்களிடையே ஏற்படுத்தும் முயற்சிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருவது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சான்ஃபிரான்சிஸ்கோவில் வளைகுடா தமிழ்மன்றத்தின் சார்பில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் அவர் பங்கேற்றதாக கூறியுள்ளார்.

முன்னதாக லாஸ் ஏஞ்சலசில் நடைபெற்ற சர்வதேச மனநல மருத்துவ மாநாட்டில் திரு. மா. சுப்பிரமணியின் கலந்துகொண்டார்

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தை ஒட்டிய மலைப் பகுதிகள், தேனி, கன்னியாகுமரி, தென்காசி, திருப்பூர், திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நீலகிரி மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலாத் தலங்கள் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Saravanan – 43 sec)**

இதனிடையே கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் இரவு முழுவதும் பெய்த கனமழை காரணமாக மின் கம்பங்கள் சாய்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ஆனைமலை புலிகள் காப்பகப் பகுதியில் உள்ள கவி அருவியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சூறைக் காற்றுடன் பெய்த கனமழை காரணமாக கொக்கல்விளாகம் பகுதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்துள்ளது.

இதனை நேரில் ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி அழகுமீனா, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் வலசை வரும் பறவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் குறுங்காடு வளர்ப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக அப்பகுதிகளில் ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Dhanasekar – 50 sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் அப்துல்லா கலீல், இன்று இந்தியா – மாலத்தீவு இடையிலான உயர்நிலைக் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

----------

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

----------

பாரசீக வளைகுடாவை அரேபிய வளைகுடா என்று பெயர் மாற்றம் செய்யும் அமெரிக்காவின் திட்டத்திற்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

----------

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கெங்கையம்மன் கோவில் சிரசு திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

----------

குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் அருவிகளில் குளிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

----------

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழாவை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் செல்லப் பிராணிகள் கண்காட்சி நடைபெற்றது.

----------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கச்சிராயபாளையத்தில் இயற்கை வேளாண் சங்கம் சார்பில் நடைபெற்ற உணவுத் திருவிழாவில் இயற்கை வேளாண் விளைபொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

----------

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அரசு மருத்துவமனை அருகே நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

----------

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோவிலில் வசந்த உற்சவத்தை ஒட்டி சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

----------

தண்டையார்பேட்டையில் வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி வசதியுடன் கூடிய சமூக நலக்கூடம் அமைக்கப்பட்டு வருவதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

----------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய தற்காப்புக் கலை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 57 கிலோ எடைப் பிரிவில் **Suchika Taryal** தங்கப்பதக்கம் வென்றார்.

45 கிலோ எடைப்பிரிவில் **Navya Pandey**-ம், 48 கிலோ எடைப்பிரிவில் **Richa Sharma**-ம், 52 கிலோ எடைப்பிரிவில் **Anupaman Swain**-ம் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

ஆடவர் 94 கிலோ எடைப்பிரிவில் **Shubam Kumar** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

மகளிர் 57 எடைப்பிரிவில் நர்மதா யாதவும், 70 கிலோ எடைப்பிரிவில் சீமா குமாரியும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-------------

ஆஸ்திரிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Aalisha Naik** வெள்ளிப் பதக்கம் வென்றார்.

-------------

ஆசிய கராத்தே சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் பாரா கராத்தே பிரிவில் இந்தியாவின் தருண் சர்மா தங்கப் பதக்கத்தை வென்றார்.

மகளிர் 55 கிலோ பிரிவில் அலி ஷாவும், 68 கிலோ பிரிவில் புவனேஸ்வரி ஜாதவும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-------------

ஐபி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 110 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

<<<<>>>>